# ஸகாதுல் ஃபித்ர் குறித்த 50 பயனுள்ள தகவல்கள்.

## (٥٠ فائدة في زكاة الفطر)

محمد صالح المُنجِّد -حفظه الله ورعاه-

ترجمه :

**محمد رَزِين محمد أكْبر**

(خريج كلية الحديث الشريف والدراسات الإسلامية

والدبلوم العالي في التوجيه والإرشاد في الجامعة الإسلامية بالمدينة المنورة)

*தமிழில்: றஸீன் அக்பர் (மதனி)*

*விரிவுரையாளர்: முஸ்லிம் பெண்கள் அரபுக் கல்லூரி, கல்-எளிய*

*2026 (ஹி.1447)*

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தானது. அல்லாஹ்வின் தூதர் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக:

இவை ஸகாதுல் ஃபித்ர் குறித்துத் தொகுக்கப்பட்ட பயனுள்ள குறிப்புகளும் அதன் சுருக்கங்களுமாகும்.

உங்கள் சகோதரன்,

முஹம்மத் ஸாலிஹ் அல்-முனஜ்ஜித்.

## உள்ளே நுழைவதற்கு முன்...

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.*

*மேலும், அவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும், அன்னாரின் குடும்பத்தினர், அன்னாரைப் பின்பற்றி நடந்த - நடக்க இருக்கின்ற அனைவரின் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உண்டாவதாக!*

***“ஸகாதுல் ஃபித்ர் குறித்த 50 பயனுள்ள தகவல்கள்”*** *என்ற இச்சிறிய நூலின் அரபு மொழி மூலவடிவம், கண்ணியத்திற்குரிய* ***அஷ்ஷெய்க் முஹம்மத் ஸாலிஹ் அல்முனஜ்ஜித் (ஹபிழஹுல்லாஹ்)*** *அவர்களால் தொகுக்கப்பட்டது. இது அவர்களின் அதிகாரப்பூர்வ வலைதளத்தில்(https://tinywebs.info/pnKxZv)வெளியிடப்பட்டிருந்தது.*

*இதில் ஸகாதுல் ஃபித்ர் என்றால் என்ன? அதன் நோக்கங்கள் யாவை? என்பவை பற்றிய விளக்கங்களுடன், தற்காலத்தில் ஃபித்ரா தொடர்பாக எழக்கூடிய பல சந்தேகங்களுக்கும், புதிய விடயங்களுக்கும் சுருக்கமாகவும், அழகாகவும், தெளிவாகவும் விடையளித்துள்ளார். உண்மையில், இதில் இடம்பெற்றுள்ள 50 குறிப்புகளையும் விரிவாக விளக்குவதென்றால் அது ஒரு பெரிய புத்தகமாகவே அமையும். எனினும், மக்கள் இலகுவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இதனை 50 சுருக்கமான குறிப்புகளாக அவர் தொகுத்துள்ளார்.*

*எனவே, இதனை தமிழ் பேசும் சகோதரர்களும் இந்த அரிய தகவல்களைத் தங்களின் தாய்மொழியில் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எனது அவாவாகும்; அதன் மூலம் ரமழான் நோன்பின்போது நிகழ்ந்த சிறு பாவங்களுக்கான பரிகாரமான*

*“ஸகாதுல் ஃபித்ரா“வை சரியான முறையில் நிறைவேற்றி, அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் உயரிய நோக்கில், அவனது உதவியால் எனது சக்திக்குட்பட்ட வகையில் இதனைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளேன்.*

*இதில் மொழியாக்கம் எனும் செயற்பாட்டுடன் சேர்த்து,*

- *ஒவ்வொரு தகவலுக்கும் பொருத்தமான தலைப்புகளை இட்டுள்ளேன்.*
- *சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய இடங்களில், அவற்றுக்கான விளக்கங்களை அடைப்புக்குறிகளுக்குள் ( ) வழங்கியுள்ளேன்.*

*எனவே, “ஸகாதுல் ஃபித்ர்” எனும் இக்கடமையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித்தந்த வழியில் செவ்வனே நிறைவேற்றி, அதன் மூலம் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை பெற்ற அடியார்களாக அல்லாஹ் நம் அனைவரையும் ஆக்கியருள்வானாக!*

**இவ்வண்ணம்,**
*உங்கள் சகோதரன்,*
***றஸீன் அக்பர் (மதனி)***
*15-03-2026*
*25 ரமழான் 1447*

**1.** ஸகாதுல் ஃபித்ர் என்பது வணக்க வழிபாடுகளில் ஒன்றாகவும், இறைவனை நெருங்குவதற்கான மகத்தான நற்கருமங்களில் ஒன்றாகவும் இருக்கின்றது. ஏனெனில், கண்ணியப்படுத்தும் விதமாகவும் மகத்துவப்படுத்தும் விதமாகவும் அல்லாஹ் தன்னோடு இணைத்துக் கொண்ட நோன்புடன் இது தொடர்புடையதாகும்.

**2.** ஸகாதுல் ஃபித்ர் என்பது ரமழான் நோன்பு முடிவடைவதை முன்னிட்டு கடமையாக்கப்படும் ஒரு தர்மமாகும். இந்தத் தர்மம் 'ஃபித்ர்' (நோன்பு துறத்தல்) உடன் இணைத்துக் கூறப்படுவதற்குக் காரணம், அந்த நோன்பு முடிவதே இது கடமையாவதற்கான காரணமாக இருக்கிறது."

**3. ஸகாதுல் ஃபித்ர் இரண்டு காரணங்களுக்காகக் கடமையாக்கப்பட்டது:**

- ***முதலாவது:*** நோன்பாளி செய்த வீணான செயல்கள் மற்றும் ஆபாசமான பேச்சுகளிலிருந்து அவனைத் தூய்மைப்படுத்துவதற்காக. "தொழுகையில் ஏற்படும் குறைகளை 'ஸஜ்தா ஸஹ்வு' (மறதிக்கான ஸஜ்தா) எவ்வாறு சரிசெய்கிறதோ, அதுபோன்று ரமழான் மாதத்திற்கான ஸகாதுல் ஃபித்ர் நோன்பில் ஏற்படும் குறைகளைச் சரிசெய்கிறது" என்று வகீஃ இப்னுல் ஜர்ராஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.
- ***இரண்டாவது:*** அந்த (பெருநாள்) நாளில் ஏழைகளுக்கு உணவாக அமைய வேண்டும் என்பதற்காக.

**4. ஸகாதுல் ஃபித்ரின் நோக்கம்:**

ஏழைகளுக்கும் - தேவையுடைய எளியவர்களுக்கும் தாராளமாக வழங்குவதும், மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிறைந்த பெருநாளில்

அவர்களைப் பிறரிடம் கையேந்துவதிலிருந்தும், அலைவதிலிருந்தும் தேவையற்றவர்களாக்குவதுமே இதன் நோக்கமாகும். ஏனெனில், மகிழ்ச்சிக்குரிய அந்த நாளில் கையேந்துவது இழிவையும் சிறுமையையும் தரும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: «فَرَضَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ زَكَاةَ الفِطْرِ طُهْرَةً لِلصَّائِمِ مِنَ اللَّغْوِ وَالرَّفَثِ، وَطُعْمَةً لِلْمَسَاكِينِ» (رواه أبو داود - ١٣٧١) بِإِسْنَادٍ حَسَنٍ.

இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: **"நோன்பாளியை வீணான மற்றும் ஆபாசமான பேச்சுகளிலிருந்து தூய்மைப்படுத்தவும், ஏழைகளுக்கு உணவாகவும் ஸகாதுல் ஃபித்ரை அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கடமையாக்கினார்கள்."**[1]

'அர்-ரபஸ்' (الرَّفَثِ): என்பது ஆபாசமான அல்லது தீய பேச்சுகளைக் குறிக்கும்.

**5. (குர்ஆனில்) 'அஃலா' அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள இறைவசனம் இதையே குறிப்பதாகச் சொல்லப்படுகிறது:**

﴿قَدْ أَفْلَحَ مَن تَزَكَّىٰ ﴿١٤﴾ وَذَكَرَ اسْمَ رَبِّهِۦ فَصَلَّىٰ ﴿١٥﴾﴾ [الأعلى: ١٤-١٥].

"நிச்சயமாகத் தூய்மையடைந்தவர் வெற்றி பெற்றுவிட்டார். அவர் தனது இறைவனின் பெயரை (நினைவு கூர்ந்து) துதித்துத் தொழுதார்." (அல்குர்ஆன் 87:14-15).

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கம் அளிக்கும்போது:

---

[1]) ஆதாரம்: அபூதாவுத் - 1371, இதன் அறிவிப்பாளர் தொடர் 'ஹஸன்' எனும் தரத்தில் உள்ளது.

رُوِيَ عَنْ عُمَرَ بْنِ عَبْدِ العَزِيزِ أنه قال: «أَدَّى زَكَاةَ الفِطْرِ ثُمَّ خَرَجَ إِلَى الصَّلَاةِ» أي صلاة العيد

***"அவர் ஸகாதுல் ஃபித்ரை நிறைவேற்றிவிட்டு, பிறகு பெருநாள் தொழுகைக்குப் புறப்பட்டுச் சென்றார் என்பதாகும்"*** *எனக் குறிப்பிட்டார்கள்.*

**6.** ***ஸகாதுல் ஃபித்ர் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும்:***

*ஏனெனில்,*

لِقَوْلِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا: «فَرَضَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ زَكَاةَ الفِطْرِ عَلَى كُلِّ حُرٍّ أَوْ عَبْدٍ، ذَكَرٍ أَوْ أُنثَىٰ مِنَ الْمُسْلِمِينَ». متفق عليه.

*இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:* ***"முஸ்லிம்களில் சுதந்திரமானவர், அடிமை, ஆண், பெண் என அனைவர் மீதும் ஸகாதுல் ஃபித்ரை அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கடமையாக்கினார்கள்."*** [2]

**7.** ***இது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்:***

*அவர் நோன்பு நோற்றவராக இருந்தாலும் சரி, (ஏதேனும் காரணத்தால்) நோன்பு நோற்காதவராக இருந்தாலும் சரி; சிறியவர், பெரியவர் மற்றும் தொட்டிலில் இருக்கும் கைக்குழந்தைக்கும் இது கடமையாகும். அதேபோல், மாதம் முழுவதும் பிரசவ கால உதிரப்போக்கில் (நிபாஸ்) இருந்து நோன்பு நோற்காத பெண்ணின் மீதும் இது கடமையாகும்.*

---

[2]) *ஆதாரம்: புஹாரி மற்றும் முஸ்லிம்.*

## 8. கருவில் இருக்கும் குழந்தையைப் பொறுத்தவரை:

அதற்காக ஸகாதுல் ஃபித்ர் கொடுப்பது கடமையல்ல என்பதில் அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து (இஜ்மா) உள்ளது. இருப்பினும், அதற்காகவும் கொடுப்பது விரும்பத்தக்கது (முஸ்தஹப்) ஆகும்.

## 9. இது எப்போது கடமையாகும்?

ரமழான் மாதத்தின் கடைசி நாள் சூரியன் மறைந்தவுடனேயே (மஃரிப் நேரம்) ஸகாதுல் ஃபித்ர் கடமையாகும். எனவே, சூரியன் மறைவதற்கு முன்னதாக ஒருவருக்குத் திருமணம் நடந்தாலோ, அல்லது ஒருவருக்குக் குழந்தை பிறந்தாலோ, அல்லது ஒருவர் இஸ்லாத்தை ஏற்றாலோ அவர் மீது ஃபித்ரா கடமையாகும். ஆனால், சூரியன் மறைந்த பிறகு இவை நடந்தால் அவர் மீது அது கடமையாகாது.

## 10. மரணித்தவர்களின் நிலை:

ஸகாதுல் ஃபித்ர் கடமையாகும் நேரத்தை அடைவதற்கு முன்னதாகவே ஒருவர் மரணித்துவிட்டால், அவருக்காக ஸகாத் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், கடமையாகும் நேரத்தை அடைந்த பிறகு, அதைக் கொடுப்பதற்கு முன்பாக அவர் மரணித்துவிட்டால், அவருடைய சொத்திலிருந்து (பணத்திலிருந்து) அதனை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில், அது அவரது பொறுப்பில் நிலைபெற்றுவிட்ட ஒரு கடனாகக் கருதப்படும்.

## 11. ஸகாதுல் ஃபித்ருக்கு 'நிஸாப்'(3) கிடையாது:

ஸகாதுல் ஃபித்ருக்கு என்று தனியான ஒரு 'நிஸாப்' (குறைந்தபட்ச சொத்து வரம்பு) கிடையாது. பெருநாள் அன்றும், அதன் இரவிலும் தனக்கும் தான் பராமரிப்பவர்களுக்கும் தேவையான உணவைத் தவிர்த்து, மேலதிகமாக யாரிடம் (உணவு அல்லது வசதி) இருக்கிறதோ, அவர் மீது இந்த ஸகாத் கடமையாகும்.

## 12. யார் யாருக்காக வழங்க வேண்டும்?

ஒரு முஸ்லிம் தனக்காகவும், எவர்களின் வாழ்வாதாரச் செலவுகளுக்கு அவர் பொறுப்பேற்றுள்ளாரோ அவர்களுக்காகவும் இதனை வழங்க வேண்டும். எனவே, ஒரு மனிதர் தனக்காகவும், தனது மனைவிக்காகவும் (அவருக்குத் தனிப்பட்ட செல்வம் இருந்தாலும் சரி), தனது ஏழைப் பிள்ளைகளுக்காகவும், தனது ஏழைப் பெற்றோர்களுக்காகவும் மற்றும் இன்னும் திருமணம் செய்து கொடுக்கப்படாத (கணவர் வீட்டிற்குச் செல்லாத) தனது மகளுக்காகவும் இதனை வழங்க வேண்டும்.

## 13. வசதியுள்ள பிள்ளைகள்:

ஒருவருடைய பிள்ளை செல்வந்தராக (வசதி உள்ளவராக) இருந்தால், அவர் சார்பாகத் தந்தை ஃபித்ரா வழங்க வேண்டிய அவசியமில்லை.

## 14. விவாகரத்து செய்யப்பட்ட மனைவியின் நிலை:

கணவர் தனது 'ரஜ்இய்யா' (மீட்கக்கூடிய நிலையில் தலாக் சொல்லப்பட்ட) மனைவிக்காக ஃபித்ரா வழங்க வேண்டும். ஆனால், 'நாஷிஸ் - النَاشِز' (கணவனுக்குக் கட்டுப்படாமல்

[3]) குறைந்தபட்ச சொத்து வரம்பு எல்லை

வாழ்பவள்) அல்லது 'பாயின் - البائن' (நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டவள்) ஆகியோருக்காக வழங்க வேண்டியதில்லை.

### 15. தந்தையின் மனைவி (சாச்சி/சித்தி/சின்னம்மா):

ஒரு மகன் தனது ஏழைத் தந்தையின் மனைவிக்காக ஸகாதுல் ஃபித்ர் வழங்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அவளுடைய வாழ்வாதாரச் செலவுகளுக்கு அந்த மகன் பொறுப்பல்ல.

### 16. வசதியுள்ள பிள்ளைகள் மற்றும் தந்தையின் வழக்கம்:

ஒரு மகன் வசதியுள்ளவராக (சுயமாக சம்பாதிப்பவராக) இருக்கும் வரை, அவர் தனக்கான ஸகாத்தை அவரே வழங்குவார். ஒருவேளை தந்தை அவர் சார்பாக வழங்கினாலும் அதில் தவறில்லை, அது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. குறிப்பாக, பிள்ளைகள் வளர்ந்து வேலைக்குச் சென்ற பிறகும், ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்காக ஸகாத் வழங்கும் வழக்கம் தந்தையிடம் இருக்குமானால், அவர் அந்தப் பழக்கத்தைத் தொடரலாம்.

### 17. மற்றவர்களுக்காக வழங்குதல்:

எவர் ஒருவர், (ஃபித்ரா கொடுப்பது) தன் மீது கடமையில்லாத ஒரு நபருக்காக ஸகாதுல் பிஃத்ராவை வழங்குகிறாரோ, அதற்கு அந்த நபரின் அனுமதி அவசியமாகும்.

### 18. வேலையாட்கள் (பணியாளர்களின்) நிலை:

ஒரு முதலாளி தனது முஸ்லிம் வேலையாட்களுக்காக ஸகாதுல் ஃபித்ர் வழங்குவது அவர் மீது கடமையல்ல. எனினும், அவர் தானாக முன்வந்து (அன்பளிப்பாக) வழங்கினால் அதில் தவறில்லை. அவ்வாறு அவர் வழங்கும்போது தனது வேலையாட்களிடம் அதனைத் தெரிவிக்க வேண்டியது

அவசியமாகும். அப்போதுதான் அவர்கள் (இது எனது ஃபித்ரா என்று) 'நிய்யத்' (எண்ணம்) வைக்க முடியும். ஏனெனில் இது ஒரு வணக்கமாகும், எந்த ஒரு வணக்கத்திற்கும் நிய்யத் என்பது மிக அவசியமாகும்.

**19. அநாதைகளைப் பராமரிப்பவர்:**

அநாதைகளைப் பராமரிக்க (நிதியுதவி செய்ய) முன்வருபவர் அந்த அநாதைக்காக ஸகாதுல் ஃபித்ர் வழங்குவது கடமையல்ல. மாறாக, அந்த அநாதையிடமே செல்வம் இருந்தால், அதிலிருந்தே ஸகாத் வழங்கப்பட வேண்டும். ஒருவேளை அநாதையிடம் செல்வம் இல்லையென்றால், மார்க்கச் சட்டப்படி அந்த அநாதையைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பில் உள்ள நெருங்கிய உறவினர் மீது அது கடமையாகும்.

**20. அதன் அளவு:**

இதன் அளவு ஒரு 'ஸாஉ' உணவாகும். ஏனெனில்,

أَبِي سَعِيدٍ الخُدْرِيِّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: «كُنَّا نُعْطِيهَا فِي زَمَانِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ صَاعًا مِنْ طَعَامٍ» متفق عليه.

அபூ ஸயீத் அல்-குத்ரி (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: **"நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்தில் ஒரு 'ஸாஉ' அளவு உணவை (ஸகாதுல் ஃபித்ராக) வழங்கி வந்தோம்."**[4].

4) ஆதாரம்: புஹாரி மற்றும் முஸ்லிம்.

## 21. இங்கே 'ஸாஉ' என்பதன் அளவு:

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பயன்படுத்திய 'ஸாஉ' எனும் அளவைக் குறிக்கும். இது சராசரி உடல்வாக்கு கொண்ட ஒரு மனிதர் தனது இரண்டு கைகளையும் சேர்த்து அள்ளும் நான்கு கைப்பிடி (அள்ளும்) அளவாகும்.

## 22. நிறையும் அளவும்:

ஒரு ஸாஉ பாத்திரத்தில் நிரப்பப்படும் பொருளின் தன்மையைப் பொறுத்து அதன் நிறை மாறுபடும். எனவே, நிறையைக் கணக்கிட்டுக் கொடுக்கும்போது, அது ஒரு ஸாஉ பாத்திரத்தின் அளவிற்குச் சமமாக இருப்பதை உறுதி செய்வது அவசியமாகும். அரிசியைப் பொறுத்தவரை இது கிட்டத்தட்ட 03 கிலோகிராம் *(03kg)* நிறையைக் கொண்டதாகும்.

## 23. எந்த வகையான உணவு வழங்க வேண்டும்?

ஸகாதுல் ஃபித்ர் என்பது மக்கள் பொதுவாக உண்ணும் எந்தவொரு உணவுப் பொருளாகவும் இருக்கலாம். உதாரணமாக: கோதுமை, சோளம், அரிசி, காராமணி *(Black-eyed peas / Cowpeas)*[(5)], பருப்பு, கொண்டைக்கடலை, அவரை மற்றும் அது போன்ற மக்களின் அன்றாட பிரதான உணவுப் பொருட்களை வழங்கலாம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு ஸாஉ அளவு உணவைக் கடமையாக்கினார்கள். நபித்தோழர்களும் தாங்கள் எதை உணவாக உட்கொண்டார்களோ, அதையே ஸகாத்தாக வழங்கி வந்தனர்.

---

5) மத்திய கிழக்கு நாடுகளில் (Middle East) 'லூபியா' என்பது மிகவும் பிரபலமான ஒரு வகை மொச்சை/பயறு வகை உணவாகும். இதனைப் பயன்படுத்தி குழம்பு அல்லது பொறியல் செய்வார்கள். இதில் புரதச்சத்து (Protein) அதிகமாக உள்ளது.

### 24. பிரதான உணவு (القوت) என்பது:

மக்கள் தங்களின் அடிப்படைத் தேவையாகத் தொடர்ந்து உட்கொள்ளும் உணவுகளைக் குறிக்கும். எனவே, சீனி (சர்க்கரை) மற்றும் தேயிலைத்தூள் ஆகியவற்றை ஸகாதுல் ஃபித்ராவாக வழங்குவது கூடாது. ஏனெனில், இவை மக்களுக்குத் தேவையான பொருட்களாக இருந்தாலும், இவை மக்களின் பிரதான உணவாக (உயிரைக் காக்கும் உணவாக)க் கருதப்படுவதில்லை.

### 25. 'டின்களில்' *(Boxes/Tins)* அடைக்கப்பட்ட உணவுகள் *(Canned foods)*:

அவை மக்களின் பிரதான உணவுகளாக இருக்கும் பட்சத்தில், அவற்றை ஸகாதுல் ஃபித்ராவாக வழங்குவதில் தவறில்லை. உதாரணமாக: டின்களில் அடைக்கப்பட்ட அவரை (Foul), கொண்டைக்கடலை, சோளம், பட்டாணி, பீன்ஸ் மற்றும் அது போன்ற உணவுகள்.

### 26. கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம்:

இத்தகைய 'டின்களில்' அடைக்கப்பட்ட உணவுகளில், அந்த உணவோடு சேர்த்து இதர திரவங்கள் அல்லது பாதுகாப்புப் பொருட்களும் கலந்திருக்கும் என்பதைத் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, ஸகாதுல் ஃபித்ராவிற்காக அளவிடும்போதோ அல்லது எடை போடும்போதோ, அந்தப் பிரதான உணவின் அளவு ஒரு 'ஸாஉ' குறையாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### 27. ஒரு 'ஸாஉ' அளவை விட அதிகமாக வழங்குதல்:

ஒரு 'ஸாஉ' அளவை விட அதிகமாகத் தானாக முன்வந்து (உபரியாக) வழங்குவது அனுமதிக்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்படும் மேலதிகமான அளவு அவருக்கு நற்கூலி பெற்றுத்தரும் ஒரு தர்மமாகக் கருதப்படும்.

### 28. பணமாக வழங்குதல்:

இதனைப் பணமாக வழங்குவது கூடாது. ஏனெனில், மார்க்கச் சட்டத்தை வழங்கியவர் (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) இதனை உணவாகவே கடமையாக்கினார்கள், பணமாக அல்ல. மேலும், வழங்க வேண்டிய பொருளின் வகையை 'உணவு' என அவர் நிர்ணயித்துள்ளார். எனவே, உணவைத் தவிர வேறு எதனையும் (ஸகாதுல் ஃபித்ராவாக) வழங்குவது அனுமதி இல்லை.

### 29. ஏழைகளின் வேறு தேவைகளுக்கா வழங்குதல்:

ஒருவருடைய கடனை அடைப்பதற்கோ, நோயாளியின் சிகிச்சைச் செலவிற்கோ, அல்லது தேவையுடைய ஒரு மாணவரின் கல்விக்கட்டணத்தைச் செலுத்துவதற்காகவோ ஸகாதுல் ஃபித்ரைப் பணமாக வழங்குவது கூடாது. ஏழைகளின் இத்தகையத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 'ஸகாதுல் மால்' (செல்வத்திற்கான ஸகாத்) மற்றும் பொதுவான தர்மங்கள் போன்ற வேறு வழிகள் இருக்கின்றன.

### 30. ஃபித்ராவை வழங்கும் நேரங்கள்:

இதனை வழங்குவதற்கு இரண்டு நேரங்கள் உள்ளன: ஒன்று 'சிறப்பான நேரம்'[(6)], மற்றொன்று 'அனுமதிக்கப்பட்ட நேரம்'[(7)].

- **சிறப்பான நேரம்:** பெருநாள் அன்று அதிகாலை நேரமாகும். ஏனெனில்,

---

[6]) வக்துல் இஸ்திஹ்பாப்.

[7]) வக்துல் ஜவாஸ்.

أن النبي صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَمَرَ بِها أَنْ تُؤَدَّى قَبْلَ خُرُوجِ النَّاسِ إِلَى الصَّلَاةِ. (متفق عليه)

மக்கள் தொழுகைக்குப் புறப்படுவதற்கு முன்னதாகவே அதனை நிறைவேற்றுமாறு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.[8]

இதனால்தான், ஸகாதுல் ஃபித்ரை வழங்குவோருக்குப் போதிய அவகாசம் கிடைப்பதற்காக, 'ஈதுல் ஃபித்ர்' நோன்புப் பெருநாள் தொழுகையைச் சற்றுத் தாமதப்படுத்தித் தொழுவது சுன்னத்தாகும்.

**31. அனுமதிக்கப்பட்ட நேரம் (வக்துல் ஜவாஸ்):**

இது பெருநாளுக்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாகும். ஸகாதுல் ஃபித்ரை வழங்கத் தொடங்குவதற்கான ஆரம்ப நேரம் ரமழான் 28-ஆம் நாள் இரவாகும். ஏனெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தோழர்கள் (ஸஹாபாக்கள்) பெருநாளுக்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அதனை வழங்கி வந்தனர். (மாதம் என்பது 29 நாட்களாகவோ அல்லது 30 நாட்களாகவோ இருக்கலாம்).

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، قَالَ: «كَانُوا يُعْطُونَ قَبْلَ الفِطْرِ بِيَوْمٍ أَوْ يَوْمَيْنِ» (رواه البخاري -١٥١١).

இப்னு உமர் (றழி ) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "**அவர்கள் (ஸஹாபாக்கள்) பெருநாளுக்கு ஒரு நாள் அல்லது இரண்டு**

8) ஆதாரம்: புஹாரி மற்றும் முஸ்லிம்

**நாட்களுக்கு முன்னதாக (ஸகாதுல் ஃபித்ரை) வழங்கி வந்தார்கள்."**(9).

## 32. முன்கூட்டியே வழங்குதல்:

(அனுமதிக்கப்பட்ட) இந்த நேரத்திற்கு முன்னதாகவே யாராவது ஸகாதுல் ஃபித்ரை வழங்கிவிட்டால், அவர் அதனை உரிய நேரத்திற்கு முன்பே வழங்கியதாகக் கருதப்படும். எனவே, அவர் அதனை மீண்டும் (உரிய நேரத்தில்) வழங்க வேண்டியது கடமையாகும்.

## 33. தன் சார்பாக வேறு ஒருவரிடம் (பிரதிநிதியிடம்) ஒப்படைத்தல்:

ஸகாதுல் ஃபித்ரை ஒரு பொறுப்புதாரியிடமோ, அல்லது ஃபித்ரா சேகரிப்பதற்காக உங்களுக்காகச் செயல்படும் பொது அமைப்பு, அல்லது நம்பகமான நபர்கள் போன்றோரிடமோ மாதத்தின் தொடக்கத்திலிருந்தே ஒப்படைப்பது அனுமதிக்கப்பட்டது. ஆனால், அந்தப் பொறுப்புதாரி அதனைப் பெருநாளைக்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே (ஏழைகளுக்குச் சென்றடையுமாறு) விநியோகிக்க வேண்டும் என்று நீங்கள் நிபந்தனை விதிக்க வேண்டும்.

## 34. பெருநாள் தினத்திற்குப் பின் தாமதப்படுத்துதல்:

பெருநாள் தினத்தைத் தாண்டி ஸகாதுல் ஃபித்ரைத் தாமதப்படுத்துவது 'ஹராம்' (தடுக்கப்பட்டது) ஆகும். அவ்வாறு தாமதப்படுத்தியவர் அதனைப் 'கழா' செய்வது கடமையாகும்.

---

9) ஆதாரம்: புஹாரி - 1511

**35. பெருநாள் தொழுகைக்குப் பிறகு வழங்குதல்:**

*பெருநாள் தொழுகைக்குப் பிறகு அதனை வழங்குவது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது:*

- *பெரும்பாலான அறிஞர்கள்: தொழுகைக்குப் பின் அதனை வழங்குவது வெறுக்கத்தக்கது என்று கூறுகின்றனர், இருப்பினும் அது நிறைவேறிவிடும்.*

- *ஆனால், மிகவும் சரியான (ஆதாரப்பூர்வமான) கருத்து என்னவென்றால்: பெருநாள் தொழுகைக்குப் பின்னால் அதைத் தாமதப்படுத்துவது 'ஹராம்' (தடுக்கப்பட்டது) என்பதாகும். ஏனெனில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லவம்) அவர்கள் கூறினார்கள்:*

«مَنْ أَدَّاهَا قَبْلَ الصَّلَاةِ فَهِيَ زَكَاةٌ مَقْبُولَةٌ، وَمَنْ أَدَّاهَا بَعْدَ الصَّلَاةِ فَهِيَ صَدَقَةٌ مِنَ الصَّدَقَاتِ» (رواه أبو داود - ١٣٧١) وحسنه الألباني.

> ***"யார் தொழுகைக்கு முன்னதாக அதனை நிறைவேற்றுகிறாரோ, அது (அல்லாஹ்விடம்) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸகாத் ஆகும். யார் தொழுகைக்குப் பிறகு அதனை நிறைவேற்றுகிறாரோ, அது சாதாரண தர்மங்களில் (ஸதகாக்களில்) ஒரு தர்மமாகும்."***(10).

*மேலும், மகிழ்ச்சிக்குரிய அந்தப் பெருநாளில் ஏழைகளை மற்றவர்களிடம் கையேந்துவதிலிருந்து தேவையற்றவர்களாக்க வேண்டும் என்ற இதன் நோக்கம், தொழுகைக்குப் பின் கொடுப்பதன் மூலம் தவறிப்போகின்றது. எனவே, தகுந்த காரணமின்றி யாராவது இதனைத் தாமதப்படுத்தினால், அவர்*

---

10) *ஆதாரம்: அபூதாவுத்* - 1371, *இமாம் அல்பானி அவர்கள் இதனை 'ஹஸன்' எனக் குறிப்பிட்டுள்ளார்கள்*

பாவம் செய்தவராவார்; மேலும் அதனை அவர் 'கழா' செய்ய வேண்டும்.

### 36. நேரம் முடிந்தாலும் கடமை நீங்காது:

அனைத்து மார்க்க அறிஞர்களும் ஒருமித்து கூறுகின்றனர்: "ஸகாதுல் ஃபித்ருக்கான நேரம் முடிந்துவிட்டாலும் அது ஒருவரின் மீதிருந்து (கடமை) நீங்கிவிடாது. ஏனெனில், அது யாருக்குரியதோ (ஏழைகளுக்கு) அவர்களுக்குச் சென்றடைய வேண்டிய ஒரு பொறுப்பாக மாறிவிட்டது. எனவே, அது ஏழைகளுக்குச் சேர வேண்டிய ஒரு கடனாகும். அதனை நிறைவேற்றுவதன் மூலமாகவே அந்தக் கடமை நிறைவேறும். அதேநேரம், அதன் நேரத்தைத் தாமதப்படுத்தியதற்காக அல்லாஹ்வின் முன்னிலையில் ஏற்படும் குற்றத்திற்குப் பாவமன்னிப்புக் கோருவதும் (இஸ்திஃபார்), மனதார வருந்துவதும் மட்டுமே பரிகாரமாகும்."[11].

### 37. தன் சார்பாக வேறு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதியின் பொறுப்பு:

ஸகாத் வழங்குபவர் வேறொருவரைப் பிரதிநிதியாக நியமித்தால், அந்தப் பிரதிநிதி உண்மையில் அதனை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டார் என்பதை உறுதி செய்யும் வரை, ஸகாத் வழங்கியவரின் பொறுப்பு நீங்காது (அவர் கடமையிலிருந்து விடுபடமாட்டார்).

### 38. நம்பிக்கை வாரிய சபை அல்லது பொது அமைப்புகளின் பங்கு:

ஓர் நம்பிக்கை வாரிய சபை அல்லது அமைப்பு (ஜம்இய்யா), ரமழான் மாதத்திலோ அல்லது அதற்கு முன்னரோ தனது சொந்தப் பணத்தில் தானியங்களை வாங்கி வைத்துக்கொண்டு, ஸகாதுல்

---

[11]) ஆதாரம்: அல்-மவ்சூஆ அல்-ஃபிக்ஹிய்யா - 23 / 341

ஃபித்ர் வழங்க விரும்புபவர்களுக்கு அவற்றை (பணம் பெற்றுக்கொண்டு) விற்கலாம். மேலும், அந்த மக்களின் சார்பில் பிரதிநிதியாகச் செயல்பட்டு, பெருநாளுக்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாக அதனை உரியவர்களுக்கு விநியோகிக்கவும் செய்யலாம்.

## 39. அமைப்புகளுக்கான (ஜம்இய்யா) கட்டுப்பாடு:

ஒரு நம்பிக்கை வாரிய சபை அல்லது அமைப்பு (ஜம்இய்யா), மக்களிடமிருந்து ஸகாத்துக்கான அனுமதியையும் அதற்குரிய தொகையையும் பெறுவதற்கு முன்னதாகவே தனது கைவசமுள்ள தானியங்களை விநியோகித்துவிட்டு, அதன் பிறகு மக்களிடமிருந்து அதற்கான விலையை வசூலிப்பது அனுமதிக்கப்படாது.

## 40. ஸகாதுல் ஃபித்ர் யாருக்கு வழங்கப்பட வேண்டும்?

பொதுவான ஸகாத் வழங்கப்பட வேண்டிய (அல்குர்ஆன் கூறும்) எட்டுப் பிரிவினருக்கும் இதனை வழங்கலாம் என்று ஒரு கருத்தும்;

இல்லை, இது ஏழைகளுக்கும்(12), வறியவர்களுக்கும்(13) மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று மற்றொரு கருத்தும் நிலவுகிறது.

இமாம் இப்னு தைமிய்யா, இப்னுல் கையிம் மற்றும் சமகால அறிஞர்களில் ஷேக் பின் பாஸ் (றஹ்) போன்றோர் இரண்டாவது கருத்தையே (ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும் மட்டும் என்பதையே) தேர்ந்தெடுத்துள்ளனர்.

12) பகீர்

13) மிஸ்கீன்

## 41. ஏழைகளைத் தேர்ந்தெடுத்தல்:

ஸகாத் வழங்குபவர் தம்மால் இயன்றவரை நற்பண்பு கொண்ட ஏழைகளைத் தேடிக் கண்டறிந்து வழங்குவது அவசியமாகும். ஒருவேளை ஸகாத்தைப் பெற்றுக்கொண்டவர் (உண்மையில்) வசதியுள்ளவர் என்பது பின்னர் தெரியவந்தாலும், அது ஸகாத் வழங்கியவரைப் பாதிக்காது; அவருடைய ஸகாத் (முறைப்படி) நிறைவேறிவிடும்.

## 42. கேட்பவருக்கு வழங்குதல்:

யாராவது உங்களிடம் வந்து ஸகாதுல் ஃபித்ர் கேட்டால், அவருடைய பேச்சு, உடை மற்றும் தோற்றம் ஆகியவற்றைக் கொண்டு (அவர் ஏழை என்று தெரிந்தால்) அவருக்கு வழங்கலாம். நமக்கு வெளிப்படையான தோற்றம் மட்டுமே தெரியும்; உள்ளங்களில் மறைந்திருப்பவற்றை அல்லாஹ்வே நன்கறிவான்.

## 43. பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்துதல்:

ஸகாதுல் ஃபித்ரைப் பள்ளிவாயல் (மஸ்ஜித்) கட்டுவதற்கோ அல்லது இதர பொதுநலத் தொண்டு திட்டங்களுக்கோ பயன்படுத்துவது அனுமதிக்கப்படாது. (ஏனெனில் இது ஏழைகளின் உணவுக்காக மட்டுமே உரியது).

## 44. பகிர்ந்தளித்தல்:

ஒரு நபருக்குரிய ஃபித்ராவை (ஒரு ஸாஉ அளவை) ஒரு குழுவினருக்குப் பகிர்ந்து வழங்குவதும், அல்லது பலருடைய ஃபித்ராவை ஒரே ஒரு ஏழைக்கு வழங்குவதும் அனுமதிக்கப்பட்டதே.

## 45. ஏழைகள் மீண்டும் தனக்குக் கிடைத்த ஃபித்ராவை வழங்குதல்:

ஒரு ஏழை ஒருவரிடமிருந்து ஸகாதுல் ஃபித்ராவைப் பெற்று, அது அவருடைய தேவைக்கு அதிகமாக இருந்தால், அதையே அவர் தனக்காகவோ அல்லது தான் பராமரிப்பவர்களுக்காகவோ ஸகாதுல் ஃபித்ராக வழங்கலாம். ஆனால், அவர் வழங்கும் அளவு ஒரு 'ஸாஉ' (கிட்டத்தட்ட 03 கிலோகிராம் *(03kg)*) முழுமையாக இருப்பதை அவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

## 46. பராமரிக்க வேண்டியவர்களுக்கு வழங்குதல்:

யாருடைய அன்றாட வாழ்வாதாரச் செலவுகளுக்கு (நபகா) ஒருவர் பொறுப்பேற்றுள்ளாரோ அவர்களுக்கு *(தனது)* ஸகாதுல் ஃபித்ரை வழங்கக்கூடாது என்பதில் அறிஞர்கள் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். உதாரணமாக: தனது பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு ஸகாதுல் ஃபித்ரை வழங்க முடியாது.

## 47. மற்ற உறவினர்களுக்கு வழங்குதல்:

(தனது பராமரிப்புப் பொறுப்பில் இல்லாத) மற்ற ஏழை உறவினர்களுக்கு இதனை வழங்குவது அனுமதிக்கப்பட்டது. உண்மையில், அந்நியர்களுக்கு வழங்குவதை விட உறவினர்களுக்கு வழங்குவதே சிறந்தது. ஏனெனில், உறவினர்களுக்கு வழங்குவது ஒரு தர்மமாகவும், அதே சமயம் உறவைப் பேணுவதாகவும் அமையும்.

## 48. எந்த ஊரில் வழங்க வேண்டும்?

ஸகாதுல் ஃபித்ர் என்பது, அதை வழங்குபவர் எந்த ஊரில் வசிக்கிறாரோ அந்த ஊரிலுள்ள ஏழை முஸ்லிம்களுக்கே வழங்கப்பட வேண்டும்; அவருடைய சொத்துக்கள் அந்த ஊரில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரியே. எனினும், ஒரு தேவை

(அவசியம்) ஏற்படும் பட்சத்தில், அதை வேறொரு ஊரிலுள்ள ஏழைகளுக்கு அனுப்புவது அனுமதிக்கப்பட்டதே என்பது அறிஞர்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட *(ராஜிஹ் ஆன)* கருத்தாகும்.

**49. முஸ்லிம் அல்லாதவர்களுக்கு வழங்குதல்:**

முஸ்லிம் அல்லாத வாகன ஓட்டுநர்கள், வேலையாட்கள் மற்றும் அது போன்றோருக்கு ஸகாதுல் ஃபித்ரை வழங்குவது அனுமதிக்கப்படாது. (ஏனெனில் இது முஸ்லிம் ஏழைகளுக்கு மட்டுமே உரியதாகும்).

**50. தரம் குறைந்த உணவை வழங்குதல்:**

பழுதடைந்த அல்லது தரம் குறைந்த (குறையுள்ள) உணவை ஸகாத்தாக வழங்குவது ஒரு தவறான செயலாகும். ஏனெனில்,

«الله طيبٌ لا يقبل إلا طيبًا»

“அல்லாஹ் தூயவன்; அவன் தூயவற்றையே (நல்லவற்றையே) தவிர வேறெதனையும் ஏற்றுக்கொள்வதில்லை.“